**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.8/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குகன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 39 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் : | தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**19.11.2025**
**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. பட்டா எண்.249ல் என் தாத்தா தாந்தோணிபிள்ளை பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அம்மா பரிமளாவின் திருமண அழைப்பிதழ் தாக்கல் செய்கிறேன். **(திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 08.11.2010, 06.02.2013ம் தேதியிட்ட வரி ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீதுகள் வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 23.02.2021ம் தேதியிட்டு தமிழக அரசு வழங்கிய விவசாய பயிர் கடன் தள்ளுபடி உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். **(பயிர் கடன் தள்ளுபடி உத்தரவு வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான ஜமாபந்தி சிட்டா சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(ஜமாபந்தி சிட்டா வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் கணக்கு வா.சா.ஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)